# சுபா பெரிசாகி விட்டாள்!

ஆங்கில மூலம் : மல்லிகா (பேர்லின்)

தன்னுடைய கைப்பையைத் திறந்து வண்ண அழைப்பிதழ் ஒன்றை எடுத்து அதனை மாலினியிடம் கொடுத்தபடியே,"எங்கள் மகள் சுபா பெரியபிள்ளை யாகி விட்டாள் என்று உனக்கு நான் ரெலிபோனில் சொன்னேன் அல்லவா! ஞாயிற்றுக்கிழமை சாமத்தியச் சடங்கு வைக்க இருக்கின்றோம். தயவுசெய்து குடும்பத் தோடுவந்திடு." என்றாள் நந்தினி.

கிடைத்த அழைப்பிதழைப் பார்த்துச் சிரித்துவிட்டு அருகில் இருந்த மேசைமேல் வைத்தாள் மாலினி.

"தாங்க்ஸ். அவள் பெரிய பிள்ளையாகி அதிக நாள் ஆகிவிட்டதல்லவா?"

"ஆம், அவள் மூன்று மாசத்துக்கு முன்பே பெரிய பிள்ளையாகிவிட்டாள். ஆனால் எத்தனை விடயங்கள் அதற்கிடையில் செய்யவேண்டுமென்று உனக்குத் தெரியும்தானே. நல்ல நாள், ஹோல் அது இதுவென்று எல்லாம் பார்க்கவேண்டி இருந்தது. நாங்கள் இந்தியா வுக்கும் வேறு போய்வந்தோம். நகைகள் நட்டுக்கள் செய்வித்தோம். என்னுடைய அம்மாவும் தங்கச்சியும் கனடாவில் இருந்து வருவார்கள். திருவினுடைய சகோ தரங்களும் லண்டனில் இருந்து வருவார்கள்."

"என்ன குடிக்கப் போகிறாய், தேநீரா அல்லது கோப்பியா?"

"ஒன்றும் வேண்டாமடி, நான் சரியான அவசரத்தில் இருக்கிறன். இன்னும் பல இடங்களுக்குப் போகவும் வேணும். தயவுசெய்து ஞாயிற்றுக்கிழமை எல்லாரும் வாருங்கோ. அதுக்கு முதல் உனக்குச் சுகம் வந்து விடும் என்று நினைக்கிறேன்"

"கோவிக்க வேண்டாம், நாங்கள் ஞாயிற்றுக்கிழமை வரமாட்டோம், ஆனால் நான் பிறகு ஒரு நாளைக்கு வந்து சுபாவைப் பார்க்கிறேன்."

"ஏன் நீங்கள் வரமாட்டீர்கள்?"

"நாங்கள்சாமத்தியச்சடங்குகளுக்குப்போவதில்லை. அது எங்கள் கொள்கை"

"ஏன் சாமத்தியச் சடங்குகளில் என்ன பிழை இருக் கிறது. அது ஒரு சாதாரணமான விடயம்தானே, என்ன, அப்பிடியில்லையே? நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்துக் காக எவ்வளவு காலம் காத்துக் கொண்டிருந்தோம். சுபா எங்கள் குடும்பத்தில் மூத்த பிள்ளை. எங்களுக்கு இது சந்தோசமான விசயம்."

"ஆம், இது சாதாரணமான விசயம்தான். சரி, அப்படி யென்றால் நாங்கள் அதைச் சாதாரண நிகழ்வாய் எடுக்க வேணும். காட் அடிச்சு, ஹோல் எடுத்து இந்த விசயத்தை விளம்பரப்படுத்தாமல் இருக்கவேணும், அதை விட்டுவிட்டு..."

"இல்லையே, நாங்கள் அப்பிடியொன்றும் விளம்பரம் செய்யவில்லையே. சும்மா ஒரு சந்தோசத்தைக் கொண் டாடப் போகிறோம். அவள் முதல்தரம் சேலை உடுத்தப் போறாள். இதை நாங்கள் மாத்திரம் செய்யவில்லை. அந்த ஹோலில் போன மாசம் மட்டும் நாலு சாமத்தியச் சடங்கு நடந்திருக்கு. என்ன இருந்தாலும் இது எங்க ளுடைய கலாச்சாரம் அல்லவா மாலினி."

மாலினியின் மனசு குழம்பிப்போய் இருந்தது. இதை நான் தொடர்ந்து பகிஷ்கரிக்க வேண்டுமா என்று தன் னையே கேட்டுக் கொண்டாள். நிச்சயமாக நந்தினிக்கு எனது பேச்சு கஷ்டமாக இருக்கும். பொறாமையில் இப்படிப் பேசுகிறேன் என்று அவள் நினைக்கக்கூடும். ஆனால் , இந்த நிலைமைக்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் போக விரும்பவில்லை என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்தபின், கொண்டாட்டத்துக்கு வருகி றேன் என்று சொல்ல முடியாது. நான் எதையும் முகத் துக்கு நேரே சொல்பவளாக இருக்க வேண்டும். எனவே நான் சுபாவினதும் ஏனைய பெண் பிள்ளைகளினதும் நலனில் இருந்து என்ன நான் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்ல வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

"நீ சொல்லுகிறது சரி. அது எங்களுடைய கலாச் சாரம். உலகம் முழுக்கத்தான் பொம்பிளைப் பிள்ளை யள் பெரிய பிள்ளையாகிறார்கள். எங்கள் கலாச்சா ரத்தில் மட்டும்தான் பெண்பிள்ளை இப்போது பிள்ளை பெறுவதற்கு ஆயத்தம் என்று எல்லாருக்கும் காட்ட நினைக்கிறோம். இது ஒரு பெண்ணின்மீது பிரயோகிக் கப்படும் முதலாவது ஒடுக்குமுறை. இதனைப் புரிந்து கொள் நந்தினி"

நந்தினியின் முகம் கோபத்தைக் காட்டி நின்றது.

இந்தப் பெண்கள் ஏன் இப்பிடிப் பொறாமை பிடித்தவர் களாய் இருக்கிறார்கள், தங்கள் வசதிக்கு மேலால் வேறு யாரும் ஏதாவது செய்வதை இவர்கள் விரும்புவ தாயில்லை.

"நீ என்ன சொல்ல வருகிறாய்? எனக்கு உன்னை விளங்க முடியவில்லை. உனக்கும் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள்! எங்களுக்கு மூன்று பேரும் பெண் பிள்ளைகள். அதனால் நாங்கள் அவர்களுக்கு நல்ல

புருசன்மாரைத் தேடும் எண்ணங்கள் இல்லாமலா போய்விடும்?"

"நந்தினி இங்கே பார். கோவப்படாதே. உண்மைகளை எதிர்கொள்ளுவோம். இன்று இந்த விவாதத்தைத் தொடங்கியது எனது பிழை. இதற்குப் பிறகும் எனது அறிவுரைகளால் நீங்கள் உங்கள் திட்டங்களை மாற்றப் போவதில்லை"

"ஆம். நாங்கள் எதையும் மாற்ற முடியாது. ஏற்கனவே பத்தாயிரம் யூரோக்கு மேல் செலவுசெய்து விட்டோம்."

"நான் உனது சிநேகிதி என்பதால் நீ தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்: பெரியபிள்ளையாகிறதென்பது என்ன?"

"நீயே சொல்லு. உனக்குத்தான் என்னைவிட அதைப் பற்றி அதிகம் தெரியும்!"

"பெரியபிள்ளையாகிறதென்பது ஒரு பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகள் இயங்கத் தொடங்கும் ஒரு படிநிலை. இது ஆண்பிள்ளைகளுக்கும் அவர்களது நிலையைப் பொறுத்து நடக்கும். பெண்பிள்ளைக்கு அது மாதவிடாயின் தொடக்கம். ஆனால் கலாச்சாரம் என்ற பெயரில் ஒடுக்கப்படுவது பெண்கள்."

மாலினிக்கு வியர்க்கத் தொடங்கியது. அவளுக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது. நந்தினி விரைந்து அவள் விழுந்துவிடாதிருக்கும்படி தாங்கிக் கொண்டாள்.

"மாலினி! உனக்கு என்ன செய்கிறது?"

மாலினி எழுந்திருப்பதற்கு முயற்சித்தபடி "எனக்குக் கொஞ்சம்...." என்றபடி தண்ணீர்க் குடுவையைக் காட்டினாள். நந்தினி ஒரு கிளாசுக்குள் தண்ணீரை ஊற்றி அவளுக்குக் கொடுத்தாள். அவள் மெதுவாகக் குடித்தாள்.

"உனக்கு இப்போது ஓ.கே.யா? அல்லது ஒரு டாக்டரைக் கூப்பிடவா?" நந்தினி கவலைப்பட்டவளாகக் கேட்டாள்.

"இல்லை. நீயோசிக்காதே. இப்போ சில நாட்களாய் எனக்கு இப்பிடி அடிக்கடி வருகிறது."

"உனக்கு என்ன பிரச்சினை? டாக்டரைப் போய்ப் பார்த்தாயா?" நந்தினி மெதுவாகக் கேட்டாள்.

நீண்ட தீவிரமான குற்றச்சாட்டுகள் கடைசியில் ஒரு சிநேகபூர்வமான உரையாடலுக்குத் திசை மாறியது. மாலினி தனது வயிற்றை ஒரு சிறிய தலையணையால் அழுத்தியபடி சோபாவில் சாய்ந்தாள்.

"உனது டாக்டர் என்ன சொன்னவர்?" தன்னுடைய சிநேகிதிக்கு என்ன பிரச்சினை என்று அறிவதில் ஆர்வமாக இருந்தாள்.

"எனக்கு இப்ப மெனோபோஸ்* வரக் கிட்டவாப் போச்சு. இப்ப கிட்டத்தட்ட ஒரு வருசமாய் இதனால் கஷ்டப்படுகிறேன்."

நந்தினி அதிர்ச்சியடைந்தாள்.

"ஒரு வருசம்?"

"சில பெண்களுக்கு ஒரு வருசத்தைவிடக் கூடவும் எடுக்கும். அது அவர்களின் உடல் நிலைமைகளைப் பொறுத்து..."

"இது எந்த வயதில் தொடங்கும்?"

"பொதுவாக 45க்கும் 55க்கும் இடையில்"

"இது ஒரு சின்ன விடயமென்றுதான் நான் நினைத்திருந்தேன்!"

"ஆம், இது சாதாரணமான விடயம்தான். வழக்கமாய் நடப்பதுதான். ஆனால் நாங்கள் மெனோபோஸ்* காலத்தில் அதிகமான உடலாரோக்கியத்தோடு இருக்க வேண்டும். பெண்ணின் 'முதலாவது மரணம்' என்று அதைச் சொல்வார்கள். இதனால் ஏற்படும் பிரச்சினைகள், அபாயங்கள், முடிவு போன்றவற்றை முற்றாய் அலட்சியப்படுத்தி விட்டு, அந்த நிகழ்வின் தொடக்கத்தைக் 'கலாச்சாரம்' என்று சொல்லிக் கொண்டாட்டங்கள் ஆகிவிடுகிறது.

"ஏன் மெனோபோஸை* ஒரு பெண்ணின் 'முதல் சாவு' என்று சொல்வது? குழந்தை பெறுவது என்பது பெரிய ரிஸ்க் இல்லையோ?"

நந்தினி போவதற்கு மிகுந்த அவசரத்தில் இருந்தாலும் இந்த உரையாடலினால் ஈர்க்கப்பட்டவளாக காணப்பட்டாள்.

"ஆம், குழந்தை பெறுவதென்பது நிச்சயமாய் ஒரு ரிஸ்க்தான். «போருக்குச் செல்லும் ஒரு போர்வீரனும் பிள்ளைப்பேற்றுக்குச் செல்லும் ஒரு பெண்ணும் ஒரேவிதமான அபாயத்தையே எதிர்கொள்கிறார்கள்» என்று சொல்வார்கள். ஆனால் மெனோபோஸ்* என்பது அவள் கடைசியாகச் சாவதற்கு முன்னால் வாழ்க்கையின் கடைசிப்பகுதியில் வருவது. அதனால் அதை 'முதல் சாவு' என்று சொல்கிறார்கள். மெனோபோஸ்* வந்தபிறகு ஒரு பெண்ணால் பிள்ளை பெற இயலாது. இதனால், அவளால் ஒரு பிரயோசனமும் இல்லை என்று நினைக்கும் சமூகத்தில் அவள் உதாசீனப்படுத்தப்படுறாள்."

"என்ன இருந்தாலும் பொம்பிளையள் மெனோபோஸாலை சாவதில்லைத்தானே?"

"ஆனால் மெனோபோஸ்* காலத்தில் உடம்பைக் கவனிக்காதுவிட்டால் புற்றுநோய் போன்ற அபாயமான வருத்தங்கள் வரக்கூடும்."

"நான் சிறு பெண்ணாக இருந்தபோது ஒரு டாக்டராகி விடலாம் என்று நினைத்து படிப்பில் சுட்டியாக இருந்தேன். அந்தக் காலத்தில் பெண்களை மேற்படிப்புப் படிக்க விடுவதில்லை. பெரிதாகிவிட்டால் படிப்பை நிறுத்தி, கலியாணம் கட்டிக் கொடுக்கப் பார்ப்பார்கள். சமையல், தையல், போன்றவற்றோடு நல்ல பெண்டாட்டியாய், நல்ல அம்மாவாய் வர என்னென்ன தேவையோ, அவற்றைச் சொல்லிக் கொடுப்பார்கள். என் அம்மாவும் அப்பாவும் இந்தக் கருத்தியலைத்தான் கொண்டிருந்தனர். இதன் விளைவாய், நாங்கள் பெரிதாகிய பின்னர் என் சகோதரியையும் என்னையும் பள்ளிக்கூடம் போவதில் இருந்து நிறுத்திவிட்டார்கள்.

"என்ன அநியாயம்" நந்தினி சலித்துக் கொண்டாள், "என் விதியும் அப்பிடித்தான் இருந்தது."

"அதனால்தான் பெண்களை ஒடுக்கும் இந்த எல்லாக் கலாச்சாரச் சடங்குகளும் கண்டிக்கப்பட வேணும். பகிஷ்கரிக்கப்படவேணும். இவைகள் அற்பமான விசயங்கள்"

நந்தினி கண்களை மூடித் தலையை ஆட்டினாள்.

மாலினி தொடர்ந்து, "இப்பிடியான விடயங்களை வெளிச்சம் போட்டுக்காட்டுகிற மாதிரியான ஒரு சடங்கு எங்கேயாவது ஆண்பிள்ளைகளுக்கு இருக்குதா? எப்போது ஆண்பிள்ளைகள் பெரிசாகின்றனர் என்று ஒருத்தருக்கும் தெரியாது. அவர்களின் 'கற்பை'ச் சோதிப்பது என்ற தர்மசங்கடத்துக்கு அவர்கள் முகம் கொடுக்கத் தேவையில்லை."

"மாலினி! இப்பிடிக் கதைக்க உனக்கு வெட்கமாயில்லையா? நல்ல காலத்துக்கு இங்கே ஒரு ஆண்களும் இல்லை."

"இதில் வெட்கப்படுகிறத்துக்கு என்ன கிடக்கு. நான் வாழ்க்கையைப் பற்றியும் அதில் நடக்கிற மாற்றங்களைப் பற்றியும் சொல்கிறேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும், வாழ்க்கை, உயிரியல்ரீதியான வித்தியாசங்களைத் தவிர, ஒரே மாதிரியானதுதான். ஏன் பெண்களை மட்டும் வித்தியாசமாய்ப் பார்க்க வேண்டும்? பெண்பிள்ளை பெரிதாகியதை இவ்வளவு ஆண்களுக்கு முன்னால் 'ஷோ' காட்டி விளம்பரப்படுத்தலாம் என்றால் நான் ஏன் இதைப்பற்றி ஒரு பெண்ணோடு பேசக் கூடாது. இப்படி நாம் பேசும்போது ஆண்கள் இல்லாதிருக்க வேண்டும் என்று நீ ஏன் விரும்புகிறாய்?"

"நாம் பெண்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எங்கள் தூய்மையைக் காப்பாற்றவேண்டும். எல்லா ஆண்களும் தமது பெண்கள் 'கற்பாய்' இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள்." நந்தினி ஒரு கடும் தொனியில் சொன்னாள்.

"ஏன் ஆண்கள் மாத்திரம்? எந்தப் பெண்களும் 'கற்பு' இல்லாத ஒரு புருசனை விரும்புவதில்லை" மாலினி திசை திருப்பினாள்.

"உன் மூன்று பிள்ளைகளையும் கல்யாணம் கட்டிக் கொடுக்கும் வரையும் கவனமாய்ப் பார் என்றே என் அம்மா நெடுகச் சொல்லுவாள்."

"அப்போ, அதுக்குப் பிறகு அவர்களுக்கு எதுவும் நடக்கலாம்?"

மாலினி சிரித்தபடிதான் சொன்னாலும் களைப்பும், பதட்டமும், அந்தரமும் ஒருவகைக் குழப்பமும் அவளை ஆக்கிரமித்தது. மெனோபோஸே* இதற்குக் காரணமென அவள் நினைத்துக் கொண்டாள். அவள் மகன் பாபு வீடு வரும் நேரமாகிறது. நந்தினி பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அது அவரவர் வாழ்க்கை என்றானபின் அவற்றுக்கு நாங்கள் பொறுப்பில்லை."

"நந்தினி நீ சொல்வது பிழை. இதுதான் எல்லா அம்மாமாரும் விடுகிற பிழை. உன் அம்மா, என் அம்மா, அவளின் அம்மா இப்படி இவர்கள் எல்லாரும் கல்யாணம் ஒன்றேதான் பெண்களின் முடிவான ஒரேயொரு மோட்சம் என்று நினைத்து விடுகிறார்கள். உண்மையில் அது அப்பிடியில்லை."

"அப்போ என்ன....?" நந்தினி எழுந்தபடி கேட்டாள்.

"சின்ன வயசிலேயே கல்யாணம் கட்டிக் கொடுத்தால், அவர்கள் பல விடயங்களில் அலட்சியமாய் இருப்பார்கள். உலகத்தில் சந்தோசம் என்றால் என்ன என்று கண்டு கொள்ள அவகாசம் இருக்காது. இதில் முதல் முக்கியமான விடயம் என்னவென்றால் அவர்களின் உடம்பு ஒரு புது வாழ்க்கைக்குத் தயாரில்லை. கடைசியில் அவர்கள் பிள்ளை பெறுகிற மெசின் மாதிரியே வந்துவிடுவார்கள். புருசன் ஒரு குடிகாரனோ, ஒரு சூதாடியோ, இன்னும் எத்தனையோ மாதிரி ஒருத்தனிடம் அகப்பட்டுவிட்டால்....?, ஒருமுறை யோசித்துப் பார். சில நேரத்தில் புருசன்மாரே அவர்களைக் கொல்வதும் நடந்துகொண்டே இருக்கிறது. இதை நினைக்கும்போது கவலையாய் இல்லையா? எத்தனை பெண்களுக்கு இப்பிடி நடந்திருக்கு. 'மனைவி செத்தால் பரவாயில்லை இன்னொன்று கட்டிவிடலாம், மாடு மட்டும் செத்துவிடக் கூடாது.' என்கிற மனப்போக்கும் சில ஆண்களிடம் இருப்பது நீ அறிவாயா?"

"இல்லை. நாங்கள் கவனமாய் இருப்போம். அவளை உடனே பள்ளிக்கூடத்தில் இருந்து நிற்பாட்ட மாட்டோம். என்றாலும் அவளை மேற்படிப்புக்கு அனுப்பிற யோசினை இல்லை. எங்களுக்கு இன்னும் இரண்டு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். சீதனம் இருக்கு கட்டி வைக்க, பிறகு ஏன் இழுத்தடிக்க வேண்டும்!"

"நல்ல சீதனம் இருந்தால் நல்ல புருசனைக் கொண்டு வரலாம் என்பதற்கு என்ன உத்தரவாதம்? உங்களிடம் இருக்கிற வசதிக்கு, ஏன் உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிறதைப் பற்றி யோசிக்காமல், அவர்களுக்கு படிச்ச மாப்பிளைகளைத் தேடுறதைப்பற்றி யோசிக்கின்றீர்கள்?"

நந்தினிக்கு மாலினியை நீண்ட காலமாகத் தெரியும். இரண்டு குடும்பங்களும் ஜேர்மனிக்கு ஒரே சமயத்தில் இடம்பெயர்ந்து வந்தவர்கள். மற்றவர்களைவிட மாலினி வித்தியாசமானவள், திறந்த மனமும் ஆடம்பரமும் அற்றவள் என்று நந்தினி அவளைப்பற்றி எடை போட்டிருந்தாள். இன்றைய உரையாடலின்போது தன்னுடைய சிநேகிதி நடந்துகொண்ட முறையையிட்டுக் கொஞ்சம் ஆச்சரியமடைந்தாள். சாமத்தியச் சடங்குகள் மற்றும் எல்லாக் கலாச்சாரச் சடங்குகளும் உண்மையில் அற்பமானவை. எனவே மாலினி தனது நண்பிக்கு வெளிப்படையாகப் புத்திமதி சொல்லும் உரிமையை எடுத்துக்கொண்டாள்.

மாலினியின் மகன் பாபு வீட்டுக்கு வந்துவிட்டான். அவனே தாய்க்கும் நந்தினி அன்ரிக்கும் டீ தயாரித்துப் பரிமாறினான். தாய் சுகவீனமுற்றிருக்கும்போது இப்படி ஆண்பிள்ளைகளும் உதவுகின்றார்களே என்று நினைத்தவளுக்கு தன் வீட்டில் இருக்கும் மிகுதி வேலைகள் தலையைக் குடைந்தன. மெசினில் தோய்க்கப்போட்ட உடுப்புகளை எடுத்துக் காயப் போடவேண்டும், கணவன் திரு பழைய சாப்பாடுகளைச் சாப்பிடமாட்டார். அவருக்கு பிட்டும் புதுக்கறிகளும் சமைக்க வேண்டும், வீட்டைத் துப்பரவாக்க வேண்டும், வெளிநாடுகளில் இருந்து ஒவ்வொருத்தராய் வரத் தொடங்கப்போகின்றனர், பிள்ளைகள் வீட்டில் தனியாக இருப்பார்கள். எஞ்சியிருந்த அழைப்பிதழ்களை இன்னொரு நாளைக்கு கொடுத்துவிடலாம், இப்போது வீடு போகவேண்டும் என்று எண்ணினாள்.

"தயவுசெய்து ஞாயிற்றுக்கிழமை வந்துவிடுங்கோ."

மாலினி எழுந்து நந்தினியைக் கொஞ்சினாள்.

"சுபாவை விரைவில் வந்து பார்ப்பேன் என்று சொல்லிவிடு"

நந்தினி மாலினியின் புத்திமதிகளைத் தலைக்குள் பதித்தபடி விடைபெற்றாள். வயதுக்கு வருதல்... கொண்டாட்டம்... மெனோபோஸ்.... தேநீர்...

*மெனோபோஸ் - மாதவிடாய் முடிவு காலம்